**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 238/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திரு. பச்சைமுத்து |
| Father's Name/Husband Name: | திரு. மருதக்கோனார் |
| Village : | தேவையூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.01.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 ரமேஷ் 2 கோபால் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது தேவையூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.2 முத்தம்மாள் என்னுடைய மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2012ம் வருடத்தில் நானும் அ.சா.2ம் ஒரு நாள் தேவையூரில் உள்ள எங்கள் வயல்காட்டில் பருத்தி விதை மதியம் 2 மணியளவில் விதைத்துக் கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த கோபால் என் மனைவியை தடிக்குச்சியால் தலையில் அடித்ததில் தலைபிளந்து விட்டது. கண்ணாபின்னா வார்த்தைகளான கண்டார ஓழி, வல்லார ஓழி என்று சொல்லி திட்டினார். அந்த சம்பவத்தை நான் விளக்கச் சென்ற போது என்னுடைய இடது முழங்கையில் கோபால் தடியால் அடித்தார். அதனால் எனக்கு இடது முழங்கையில் இரத்தம் வடிந்தது. அப்போது ரமேஷ் வந்து அங்கு வந்து என்னுடைய உயிர்நிலையில் எட்டி உதைத்தார். நான் கீழே விழுந்து மயக்கமானேன். எங்களை கண்ணாபின்னா என்று திட்டினார்கள். எங்களுக்கு வலி பொறுக்க இயலாத நிலையில் இருந்ததால் பெரம்பலூர் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். புகார் கொடுத்தோம். போலிசார் வழக்கு பதிவு செய்து எங்களை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.